செய்தி மக்கள் தொடர்பு து
செய்தி வெளியீடு எண். 61 மாவட்ட ஆட்சியரகம், நாள் :2
வேலூர் மாவட்டம்.

ந.க. எண். கே1/17113/2018
நாள் : 01.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் சமையலர் மற்றும் துப்புரவாளர் வேலைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் விடுதிகள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு 112 சமையலர் பணியிடங்கள் (ஆதிதிராவிடர் நலத் துறை 83 சமையலர் பணியிடங்கள் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 29 சமையலர் பணியிடங்கள்) ரூ.15700–50000 என்ற ஊதிய பிணைப்பில் ரூ.15,700/– அடிப்படை ஊதியம் மற்றும் இதர படிகள், 26 தொகுப்பூதிய துப்புரவாளர் பணியிடங்கள் ரூ.3,000/– தொகுப்பூதியம் (ஆதிதிராவிடர் நலத் துறை 26 தொகுப்பூதிய துப்புரவாளர் பணியிடங்கள்) ஆகிய பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 1) கல்வித்தகுதி | ➢ குறைந்த பட்சம் தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>➢ அதிக பட்சம் 10 ஆம் வகுப்பு தோல்வி அடைந்திருக்க வேண்டும். |
| 2) வயது வரம்பு | ➢ 01.07.2019 அன்றைய நிலையில் குறைந்த பட்சம் 18 வயது அதிக பட்சம் 35 வயது.<br>(அரசு விதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்) |
| 3) முன்னுரிமை | ➢ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>➢ சைவ மற்றும் அசைவ உணவுகள் தரமாகவும், சுவையாகவும் சமைக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>➢ வேலூர் மாவட்டத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும். |

தகுதியான நபர்கள் வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு 18.10.2019–க்குள் கிடைக்கும் வகையில் விண்ணப்பித்திடவும், காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றை பரிசீலிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்.

02/10/19
மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர் மாவட்டம்.